# கல்வித்துறையில் கைவைக்கும் மத்திய அரசு!

## -கழகத்தின் 'ரியாக்ஷன்' என்ன?

**எம்.காசிநாதன்**

**தே**சிய உயர்கல்வி ஆராய்ச்சி ஆணையத்தின் தாக்கம், மாநிலங்களில் பெருமளவில் எதிரொலிக்கும் என்றே தெரிகிறது. மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் உள்ள பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை நியமிப்பதுதான் கல்வித்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் அதிகாரங்களாகக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இதுவரை இருந்து வந்துள்ளது. ஆனால், நியமிக்கப்பட்ட துணை வேந்தர்கள் சிலர் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிக்கொண்டார்கள். செக்ஸ் புகாருக்கு உள்ளானவர்கள்கூட உண்டு. 'மருமகளை டார்ச்சர் செய்தார்கள்' என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளான துணை வேந்தர்களும் உண்டு. இவற்றின் பின்னணிக் காரணம், தமிழகத்தில் துணை வேந்தர்கள் நியமனம் என்பது பல காலமாகவே அரசியல் மயமாகிவிட்டதுதான். இப்படி 'பாலிடிக்ஸ்' ஆகிவிட்ட துணை வேந்தர் நியமனத்தை இப்போது மத்திய அரசின் கீழ் கொண்டு வருகிறது, புதிதாக வந்துள்ள தேசிய உயர்கல்வி ஆராய்ச்சி ஆணையம்.

மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆணையத்திற்கு 'பவர்ஃபுல் பற்கள்' கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆணையத்தில் சேர்மன் தவிர ஏழு பேர் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்களில் சேர்மன் மற்றும் மூன்று பேர் முழு நேர உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை யார் தேர்வு செய்வது? பிரதமர் தலைமையிலான குழுவே இந்த ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும்! அந்தக் குழுவில் பிரதமருடன் பாராளுமன்ற சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். இது முற்றிலும் மத்திய அரசைச் சார்ந்த அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள் இடம்பெறும் குழுவாகவே உருவாகிறது. இந்தக் குழு, ஆணையத்தின் சேர்மன் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும். ஆணையத்தின் உறுப்பினர்களில் மாநிலங்களின் சார்பில் யாரும் இடம்பெறும் சாத்தியக்கூறுகள் இல்லை.

இந்த ஆணையத்தில் 'காலேஜியம்' என்ற அமைப்பு இயங்கப் போகிறது. அதுதான் உயர்கல்வி வளர்ச்சி

